ஒரே ஒரு இரட்சகர் தான் உண்டு. அவர் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. உன் பாவங்களினிமித்தம் நீ மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, உலகத்தில் உன்னோடு இருப்பவர்களிடம் நீ அதை அறிக்கை செய்ய வேண்டும். இதுவே, இரட்சிப்பின் வழியாகும். கிறிஸ்துவோடு இந்த உறவை நீ ஏற்படுத்தாவிட்டால், உனக்கு விடுதலையோ, சுகமோ கிடைக்க முடியாது.

2 கொரிந்தியர் 5:17ல் "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின" என வாசிக்கிறோம்.

# தற்கொலையிலிருந்து காப்பாற்றப்படுவது

கிறிஸ்துவுடன் புதிய வாழ்க்கையை நடத்தும் ஒருவனுக்கு - மன்னிப்பு, குற்றவுணர்விலிருந்து, பயத்திலிருந்து விடுதலை, ஒருவகையான திருப்தி, நல்லுணர்வு, வாழவேண்டும் என்கிறஆசை யாவும் ஏற்படுகின்றன - அனுதின வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியானவர் பெலன் தருகிறார்.

**விநியோகிப்பவர் விலாசம்**

SAVED FROM SUICIDE (Tamil)


*எங்கள் முகவரி:*

**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**

67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in


என்னுடைய வாழ்க்கை பாவத்தினால் அழிந்து போனது. இனி வாழ எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை.


தற்கொலையிலிருந்து காப்பாற்றப்படுவது



# தற்கொலையிலிருந்து காப்பாற்றப்படுவது

வாலிபன் ஒருவன் நற்செய்தி கூறும் துண்டுப் பிரதிகளை எடுத்துக் கொண்டு வீடு வீடாக விநியோகித்துக் கொண்டு போனான். ஒரு வீட்டுக் கதவை அவன் தட்டிய போது, பதிலில்லை. எனினும், அவன் தொடர்ந்து தட்டியபோது, படிக்கட்டில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. தொடர்ந்து, கதவு கொஞ்சமாகத் திறக்கப்பட்டபோது, அவன் ஒரு துண்டுப் பிரதியை நீட்டினான். உள்ளேயிருந்தவன் கதவைக் கொஞ்சமாகத் திறந்து அதைப் பிடுங்கிக் கொண்டு கதவைச் சாத்திக் கொண்டான். எல்லாமே புதிராகவே காணப்பட்டது.

அடுத்த வாரத்திலும், அந்த வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினான். முன் போலன்றி உடனடியாகக் கதவு திறக்கப்பட்டது. "உள்ளே வாரும், நான் உம்மோடு பேசவிரும்புகிறேன்" என்றான். அந்த இளைஞனை அவன் மாடிக்கு அழைத்துச் சென்று, ஒரு அறைக்குள் கூட்டிக் கொண்டு போனான். அங்கு ஒரு பயங்கரம் காத்திருந்தது.

மேற்கூரையிலிருந்து ஒரு தூக்குக் கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. கீழே ஒரு பெட்டி வைக்கப்பட்டிருந்தது. "நான் ஏன் உங்களை இங்கு கொண்டு வந்தேன் என்று தெரியுமா? நீர் கடந்த வாரம் என் கதவைத் தட்டியபோது நான் இந்தப் பெட்டியின்மேல் நின்று கொண்டிருந்தேன். என் தலை அந்த முடிச்சில் இருந்தது. நான் குதிப்பதற்குத் தயாராக இருந்தேன். அப்படியாகத் தற்கொலை செய்ய விரும்பினேன். அந்த நேரம் நீர் கதவைத் தட்டியதால், குதித்து தற்கொலை செய்துகொள்வதா, கதவைத் திறப்பதா என்று தெரியவில்லை. பின்னர், நான் இறங்கி வந்து நீர் கொடுத்த கைப்பிரதியைப் பெற்றுக்கொண்டேன். தேவன் அந்தச் செய்திமூலம் என்னை ஆசீர்வதித்தார்; என் ஜீவனையும், என் ஆத்துமாவையும் காப்பாற்றினார்" என்றான்.

அரசாங்கக் கணக்கெடுப்பின் படி ஒவ்வொரு வருடமும் ஒரு மில்லியன் மக்களுக்கு மேல் தற்கொலையினால் மரிக்கின்றனர். ஒவ்வொரு 40 வினாடிகளிலும் ஒருவர் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு 3 வினாடியிலும் உலகின் ஏதோ ஒரு பகுதியில் ஒருவர் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார். சமுதாயத்தில் எல்லாருமே இதனால் பாதிக்கப்படுகின்றனர், இளைஞர்களும், அழுத்தங்களினால் பாதிக்கப்படும் சிறுவர்களும், வயதானவர்களும், வேலை செய்பவர்களும் கூட தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் அவர்கள் தங்கள் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிக்கப்படுகின்றனர். இயேசு கிறிஸ்துவோடு கூடிய தனிப்பட்ட ஐக்கிய வாழ்க்கையே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகும்.

## இயேசுகிறிஸ்துவோடு மனிதன் ஒரு புதிய தனித்தொடர்பை ஏற்றுக்கொள்வது எப்படி?

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6) என்று இயேசு கூறினார். தொடர்ந்து அவர் "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்றும் கூறுகிறார். மேலும் "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).